# தேவனுடைய ராஜ்யம் என்றால் என்ன?

**வேதஆராய்ச்சியாளர் எம்.எஸ்.வசந்தகுமார்**

இயேசுகிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் தேவனுடைய ராஜ்யமே அவருடைய செய்தியின் பிரதான விஷயமாயிருந்தது. இதனால்தான், அவர் தம்முடைய ஊழியத்தை ஆரம்பித்தபோது, "மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்" (மத்.4:17). மாற்கு இதைப்பற்றி எழுதும்போது, "யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து: காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று. மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்" என்று பிரசங்கித்ததாகக் குறிப்பிட்டுள்ளார் (மாற்.1:14-15). எனினும், இயேசுகிறிஸ்துவின் பிரசங்கத்தைக் குறிப்பிடும்போது மத்தேயு "பரலோகராஜ்யம்" என்றும் மாற்கு "தேவனுடைய ராஜ்யம்" என்றும் எழுதியுள்ளது நமக்கு குழப்பத்தை ஏற்படுத்தலாம். இதனால்தான், இயேசுகிறிஸ்து இரண்டுவிதமான ராஜ்யங்களைப்பற்றி பேசுவதாகச் சிலர் போதிக்கின்றனர். ஆனால், மத்தேயு தன்னுடைய சுவிசேஷத்தை யூதர்களுக்கு எழுதுவதினால், அவர்களுடைய அக்கால மொழிவழக்கின்படி தேவனுடைய ராஜ்யத்தைப் பரலோக ராஜ்யம் என்று குறிப்பிட்டுள்ளார். ஏனெனில், அக்கால யூதர்கள் தேவன் என்னும் சொல்லை உச்சரிப்பதைத் தவிர்த்துவந்தனர். இது, "தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக" என்னும் கட்டளையை மீறும் ஒரு செயலாக அவர்களுக்குத் தென்பட்டது. இதனால், ஜெபாலங்களில் வேதவாக்கியம் வாசிக்கப்படும்போதுகூட, தேவன் என்னும் சொல்லை உச்சரிக்காமல் ஒருசில வினாடிகள் மவுனமாய் இருப்பது அவர்களுடைய பழக்கமாய் இருந்தது. இதனால்தான், யூதர்களுக்கு எழுதப்பட்ட மத்தேயுவின் சுவிசேஷத்தில் தேவனுடைய ராஜ்யம் என்பதற்குப் பதிலாக பரலோக ராஜ்யம் என்னும் சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது. எனவே, தேவனுடைய ராஜ்யம் பரலோக ராஜ்யம் என்னும் இரண்டு சொற்பிரயோகங்களும் ஒன்றையே குறிக்கின்றன.

இயேசுகிறிஸ்து தேவனுடைய ராஜ்யத்தைப்பற்றி பிரசங்கிக்கும்போது, "தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று" (மாற்.1:14-15) என்றே குறிப்பிட்டுள்ளார். ஏனென்றால், இயேசுகிறிஸ்து பிரசங்கித்த தேவனுடைய ராஜ்யம், பூகோளரீதியாக குறிப்பிட்ட ஒரு இடத்தில் இவ்வுலகத்தில் இருக்கும் ராஜ்யம் அல்ல. இதனால்தான், "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே. இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல" (யோவா.18:36) என்று இயேசுகிறிஸ்து கூறினார். ஏனெனில், அக்கால யூதர்கள் தேவனுடைய ராஜ்யம் இவ்வுலகத்தில் ஸ்தாபிக்கப்படும் என்னும் எண்ணத்தில் ராஜயத்தை எதிர்பார்த்தவர்களாக இருந்தனர். இதனால்தான், இயேசுகிறிஸ்து அற்புதங்கள் செய்தபோது அவர்கள் அவரைத் தங்களுடைய ராஜாவாக்க முற்பட்டனர். ஆனால், இத்தகைய சந்தர்ப்பங்களில் இயேசுகிறிஸ்து அவர்களைவிட்டுச் சென்றுவிடுவது அவருடைய வழக்கமாயிருந்தது (யோவா.6:14-15).[1] ஏனெனில், இயேசுகிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்தபோது அறிவித்த தேவனுடைய ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதாக இருக்கவில்லை. அப்படியிருந்தும், இயேசுகிறிஸ்து கடைசியாக எருசலேம் நகரத்திற்குச் சென்றபோது திரளான மக்கள் அவரை ஆரவாரத்துடன் வரவேற்று, அவரை ராஜாவாக வாழ்த்திப் பாடி, தங்களை ரோம ராட்சியத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கும்படி கதறினார்கள். இதனால்தான் அவர்கள் "ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர். கர்த்தரின் நாமத்தினாலே வருகிற நம்முடைய பிதாவாகிய தாவீதின் ராஜ்யம் ஆசீர்வதிக்கப்படுவதாக, உன்னதத்திலே ஓசன்னா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள்" (மாற்.11:9-10). இதில் ஓசன்னா என்பது, "விடுவியும்" என்று மன்றாடும் எபிரெய

[1] யோவான் ஆறாம் அதிகாரத்தில் இயேசுகிறிஸ்து ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும்கொண்டு ஐயாயிரம் பேருக்கு உணவுகொடுத்த பின்பு "இயேசு செய்த அற்புதத்தை அந்த மனுஷர் கண்டு: மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி என்றார்கள். ஆதலால் அவர்கள் வந்து, தம்மை ராஜாவாக்கும்படிப் பிடித்துக்கொண்டு போக மனதாயிருக்கிறார்களென்று இயேசு அறிந்து, மறுபடியும் விலகி, தனியே மலையின்மேல் ஏறினார் (யோவா.6:14-15).

சொல்லாகும்.[2] மேலும், அவர்கள் இயேசுகிறிஸ்துவை “கர்த்தரின் நாமத்தில் வருகிறவர்” என்று புகழ்ந்து, “கர்த்தரின் நாமத்தினாலே வருகிற நம்முடைய பிதாவாகிய தாவீதின் ராஜ்யம் ஆசீர்வதிக்கப்படுவதாக” என்று கூறி ஓசன்னா என்று ஆர்ப்பரித்ததினால், அவர்கள் இயேசுகிறிஸ்துவை ராஜாவாக அங்கீகரித்து, தங்களை ரோம ராஜ்யத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, தாவீதின் ராஜ்யத்தை இஸ்ரவேலில் மறுபடியும் ஸ்தாபிக்கும்படியான மன்றாடுதலாகவே அவர்களுடைய கோஷங்கள் இருந்தன. ஏனெனில், மரக்கிளைகளையும் வஸ்திரங்களையும் பாதையில் போட்டு ஒருவரை வரவேற்பது அக்காலத்தில் ராஜாவை வரவேற்கும் முறையாகவே இருந்தது (2ராஜா.9:13).[3]

இயேசுகிறிஸ்து அற்புதங்கள் செய்தபோது அவரே பழைய ஏற்பாட்டில் வாக்களிக்கப்பட்ட விதமாகத் தாவீதின் ராஜ்யத்தை மறுபடியுமாக இஸ்ரவேலில் ஸ்தாபிப்பார் என்னும் எண்ணத்தை மக்களுக்கு ஏற்படுத்தினாலும், இயேசுகிறிஸ்து அவர்களுடைய எதிர்பார்ப்பின்படி எதுவும் செய்ய வில்லை. அப்படியிருந்தும் அவர் தேவராஜ்யத்தைப்பற்றியே அதிகமாக போதித்தார்.[4] எனினும், ராஜ்யம் என்பதற்கு அவர் அரமேய மொழியில் உபயோகித்த “மல்ஃகு” (*malku*) என்னும் சொல்லும், புதிய ஏற்பாடு எழுதப்பட்ட கிரேக்க மொழியில் உள்ள “பசீலேயா” (*basileia*) என்னும் கிரேக்கச் சொல்லும் பூகோளரீதியான ராட்சியத்தை அல்ல, ஆளுகையைக் குறிப்பிடும் சொல்லாகவே உள்ளது. இதைப்போலவே, பழைய ஏற்பாட்டில் உபயோகிக்கப்பட்டுள்ள “மல்ஃகுத்” (*malkuth*) என்னும் எபிரெய சொல்லும் ஆளுகையைக் குறிப்பிடுவதினால், இதைத் தமிழில் “ராஜரீகம்” என்று மொழிபெயர்த்து, “கர்த்தர் ராஜரீகம் பண்ணுகிறார்” என்று வேதாகமத்தில் குறிப்பிட்டுள்ளனர். ஏனெனில், “தேவனுடைய ராஜ்யம் என்பது, தேவன் ராஜாவாயிருக்கின்றார் என்பதை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்ட சொற்பிரயோக மாகவே உள்ளது.”[5] எனவே இயேசுகிறிஸ்துவும், ராஜ்யம் என்னும் சொல்லைத் தேவனுடைய ஆளுகை என்னும் அர்த்தத்திலேயே உபயோகித்துள்ளார். இதனால்தான், “தேவனுடைய ராஜ்யம் எப்பொழுது வருமென்று, பரிசேயர் அவரிடத்தில் கேட்டபொழுது, அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: தேவனுடைய ராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது. இதோ, இங்கே என்றும், அதோ, அங்கே என்றும் சொல்லப்படுகிறதற்கும் ஏதுவிராது. இதோ, தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே என்றார்” (லூக்.17:20-21). எனினும், தேவனுடைய ராஜ்யம் மனிதருக்குள் இருக்கின்றது என்னும் அர்த்தத்தில் இயேசுகிறிஸ்து இவ்வாறு கூறவில்லை. ஏனெனில் இயேசுகிறிஸ்து பரிசேயர்களிடமே இவ்வாறு கூறினார். எனவே, பரிசேயரின் உள்ளத்தில் தேவனுடைய ராஜ்யம் இருக்கின்றது என்று இயேசுகிறிஸ்து கூறியதாக அவருடைய கூற்றை நாம் தவறாகப் புரிந்துகொள்ளக் கூடாது.[6] உண்மையில், இயேசுகிறிஸ்து தம்முடைய சீடர்களிடம் இவ்வாறு கூறாமல் பரிசேயர்களிடம் கூறியது நமக்கு குழப்பத்தையே ஏற்படுத்துகிறது.[7] ஆனால், தேவனுடைய ராஜ்யம் மனிதருக்குள், அதாவது சில ஆராய்ச்சியாளர்கள் நினைப்பதுபோல “மனிதருடைய உள்ளத்தில் இருப்பதாக”[8] வேதாகமம் போதிக்கவில்லை. ஏனெனில், தேவனுடைய ராஜ்யம் மனிதருக்குள் வருவதாக அல்ல, மனிதர்கள் தேவனுடைய ராஜ்யத்திற்குள் வருவதாகவே வேதாகமம் கூறுகிறது.[9]

---

[2] M.H.Pope, “Hosanna: What It Really Means” In *Bible Review*. 4/2 (1988), pp. 16-25.

[3] 2ராஜாக்கள் 9:13இல், “அவர்கள் தீவிரமாய் அவரவர் தங்கள் வஸ்திரத்தைப் படிகளின் உயரத்தில் அவன் கீழே விரித்து, எக்காளம் ஊதி: யெகூ ராஜாவானான் என்றார்கள்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[4] தேவனுடைய ராஜ்யம் அல்லது பரலோக ராஜ்யம் என்னும் சொற்பிரயோகம் மத்தேயுவில் 46 தடவைகளும் மாற்குவில் 14 தடவைகளும் லூக்காவில் 34 தடவைகளும் இடம்பெற்றுள்ளதோடு, இயேசுகிறிஸ்துவின் பிரசங்கங்கள் இதைப்பற்றியவைகளாகவே உள்ளன (L.Morris, *New Testament Theology*, p. 106).

[5] J.R.Edwards, *Luke: The Pillar New Testament Commentary*, p. 149.

[6] D.L.Bock, *Luke: Baker Exegetical Commentary on the New Testament*, p. 1415.

[7] J.P.Meier, *A Marginal Jew: Rethinking the Historical Jesus Volume 2*, p. 426.

[8] J.M.Creed, *The Gospel According to Luke*, p. 218-219; London: Macmillan, 1930. R.Sneed, “The Kingdom of God Is within You” In *Catholic Biblical Quarterly*. 24 (1962), pp. 363-382; C.H.Dalman, *The Words of Jesus Considered in the Light of Post-Biblical Jewish Writings and the Aramaic Language*, p. 145-147; Edinburgh, Clark, 1090. C.H.Dodd, *The Parables of the Kingdom*, pp. 62-63. New York: Scribner, 1961.

[9] I.H.Marshall, *Luke: The New International Greek Testament Commentary*, p. 655.

இயேசுகிறிஸ்து பரிசேயரிடம், தேவனுடைய ராஜ்யம் “உங்களுக்குள் இருக்கின்றதே” என்று கூறியபோது, அது “உங்கள் மத்தியில் இருக்கின்றது” என்பதையே சுட்டிக்காட்டியுள்ளார்.[10] ஏனெனில், இயேசுகிறிஸ்துவின் போதனையில் தேவனுடைய ராஜ்யம் என்பது அவரையே குறிக்கின்றது. அதாவது, இயேசுகிறிஸ்துவே தேவனுடைய ராஜ்யமாக இருக்கின்றார். ஏனெனில், அவர் தம்மோடு தேவனுடைய ராஜ்யத்தை, அதாவது தேவனுடைய ஆளுகையைப் பூமிக்கு கொண்டுவந்து விட்டார். இதனால்தான், அவர் தம்முடைய ஊழியத்தை ஆரம்பித்தபோது “தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று” என்று தெரிவித்தார். அதாவது, “இயேசுகிறிஸ்துவினுடைய வருகை தேவனுடைய ராஜ்யத்தை மனிதருக்குச் சமீபமாய்க் கொண்டு வந்துள்ளது.”[11] இதனால், மனிதர்கள் தேவனுடைய ராஜ்யத்தைத் தேடி எங்கும் செல்லவேண்டியதாய் இருக்கவில்லை. ஏனெனில், இயேசுகிறிஸ்துவின் பிரசன்னமே தேவனுடைய ராஜ்யத்தை அவர்களிடம் கொண்டு வந்திருந்தது. இதனால், அவரே அவர்களுடைய கண்களுக்கு முன் தேவனுடைய ராஜ்யமாக இருந்தார்.[12] இதனால்தான், பிசாசின் பிடியிலிருந்து ஒருவனை விடுவித்தபோது, “நான் தேவனுடைய விரலினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே” (லூக்.11:20) என்று இயேசுகிறிஸ்து கூறினார்.[13] ஏனெனில், பிசாசின் பிடியில் இருந்தவன், பிசாசின் ஆளுகையில், அதாவது பிசாசின் ராஜ்யத்தில் இருந்தான். ஆனால், இயேசுகிறிஸ்து அவனைப் பிசாசின் பிடியிலிருந்து விடுவித்ததினால், அவன் பிசாசின் ஆளுகையில் (ராஜ்யத்தில்) இருந்து விடுவிக்கப்பட்டு தேவனுடைய ராஜ்யத்திற்குள் வந்து விட்டான். மேலும், நாம் வாழும் உலகம் பிசாசின் ஆளுகைக்கு உட்பட்டிருப்பதினால் (யோவா.12:31, 14:30, 16:11, 1யோவா.5:19)[14] இவ்வுலகில் வாழ்பவர்கள் அவனுடைய ராஜ்யத்தி லேயே இருக்கின்றனர். ஆனால், பிசாசின் கிரியைகளை அழிப்பதற்காகவே இயேசுகிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்ததினால் (1யோவா.3:8)[15] அவர் பிசாசின் ராஜ்யத்தில் இருப்பவர்களைத் தேவனுடைய ராஜ்யத்திற்குள் கொண்டுவருகிறவராக இருக்கின்றார் (கொலோ.1:13).[16]

இயேசுகிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்தபோது, தேவனுடைய ராஜ்யமும் அவரோடு இவ்வுலகத் திற்கு வந்துவிட்டாலும், அவர் குறிப்பிட்டவிதமாக மனிதருடைய கண்களுக்குத் தென்படக்கூடிய விதத்தில் தேவனுடைய ராஜ்யம் பிரத்தியட்சமாக வரவில்லை (லூக்.17:20).[17] ஏனெனில், புதிய ஏற்பாட்டுக் காலத்தில் தேவனுடைய ராஜ்யம் ஆவிக்குரியதாகவே உள்ளது. இதனால்தான், “தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று” என்று கூறிய இயேசுகிறிஸ்து, “மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்” என்றார்” (மாற்.1:15). சுவிசேஷம் என்பது இயேசுகிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியாகும். இது மனிதருடைய பாவம் போக்கும் பலியாக மரிப்பதற்காகத் தேவனே இயேசுகிறிஸ்து என்னும் பெயரில் மனிதனாக இவ்வுலகத்திற்கு வந்து (1தீமோ.3:16)[18] தம்மையே பாவம் போக்கும் பலியாக சிலுவையில் ஒப்புக்கொடுத்ததைப்பற்றிய செய்தியாகும் (1கொரி.15:1-

---

[10] F.W.Danker, *Jesus and the New Age: A Commentary on St.Luke's Gospel*, p. 292; Philadelphia: Fortress Press, 1988. E.E.Ellis, *Luke: New Century Bible Commentary*, p. 211. W.F.Arndt, *The Gospel According to St.Luke*, pp. 373-374. St.Louis: Concordia Press, 1956. I.H.Marshall, *Luke: The New International Greek Testament Commentary*, p. 655.

[11] L.Morris, *New Testament Theology*, p. 106.

[12] D.L.Bock, *Luke: Baker Exegetical Commentary on the New Testament*, pp. 1414-1415, 1417; I.H.Marshall, *Luke: The New International Greek Testament Commentary*, p. 656; E.E.Ellis, *Luke: New Century Bible Commentary*, p. 211; A.Schweitzer, *The Good News According to Like*, p. 273. Atlanta: John Knox Press, 1984.

[13] இயேசுகிறிஸ்து லூக்கா 11:20இல் கூறிய விஷயம் மத்தேயு 12:28இலும் குறிப்பிடப்பட்டிருந்தாலும், “தேவனுடைய விரல்” என்பதற்குப் பதிலாகத் “தேவனுடைய ஆவி” என்னும் சொல்லே உள்ளது.

[14] மனிதர் சாத்தானுடைய ஆளுகைக்கு உட்பட்டிருப்பதினாலேயே யோவான் 12:31, 14:30, 16:11 என்னும் வசனங்களில் பிசாசை “இவ்வுலகத்தின் அதிபதி” என்று இயேசுகிறிஸ்து குறிப்பிட்டுள்ளார். 1யோவான் 5:19இல், “உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது” என்பதை யோவான் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்வசனங்களில் உலகம் என்னும் சொல், உலகில் வாழும் மக்களையே குறிக்கின்றது. ஏனெனில், சாத்தான் அல்ல, தேவனே இவ்வுலகைத் தம்முடைய கட்டுப்பாட்டின் கீழ்வைத்திருக்கின்றார் (எபி.1:2-3).

[15] 1யோவான் 3:8இல் “பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[16] கொலோசெயர் 1:13இல் “இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்” என்று பவுல் குறிப்பிட்டுள்ளார்.

[17] லூக்கா 17:20இல் “தேவனுடைய ராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது” என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார்.

[18] 1தீமோத்தேயு 3:16இல், “தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்” என்று குறிப்பிடப்படுள்ளது. ஏனெனில், “ஆதியிலிருதே தேவனாயிருந்த வார்த்தையே” (யோவா.1:1), “மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்” (யோவா.1:14).

5).[19] இயேசுகிறிஸ்துவைப்பற்றிய இந்நற்செய்தி ஒருவருக்கு அறிவிக்கப்படும்போது, பரிசுத்தாவியானவர் அவனுக்குப் பாவத்தையும் நீதியையும் நியாயத்தீர்ப்பையும்பற்றி கண்டித்து உணர்த்துகிறார் (யோவா.16:8).[20] அதாவது, அவன் பாவி என்பதையும், அவனுக்கு இயேசுகிறிஸ்துவின் நீதி தேவை என்பதையும், இல்லாவிட்டால் அவனுக்கு நியாயத்தீர்ப்பு உண்டு என்பதையும் உணர்த்துகிறார். பரிசுத்தாவியானவரின் இத்தகைய உணர்த்துதலை ஏற்றுக்கொள்பவன், தான் பாவி என்பதை ஒத்துக்கொண்டு அவற்றை இயேசுகிறிஸ்துவிடம் அறிக்கையிடுவதினால், அவனுடைய பாவத்தை அவனிலிருந்து எடுத்துப்போடும் இயேசுகிறிஸ்து அவனுக்குத் தம்முடைய நீதியைக் கொடுத்து அவனை நீதிமானாக்குகிறார். இதுவே பாவியான மனிதன் பிசாசின் ராஜ்யத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கும் வழிமுறையாய் உள்ளது. மேலும், தேவனுடைய ராஜ்யம் ஆவிக்குரியதாய் இருப்பதினால், ஒருவன் அதற்குள் செல்லும்போது அவன் ஆவிக்குரியபிரகாரமாகப் பிறக்கின்றான். இதனால்தான், ஒருவன் தேவனுடைய ராஜ்யத்திற்குள் செல்வதற்கு அவன் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார் (யோவா.3:3).[21] இது, இயேசுகிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியின் ஊடாகக் கிடைக்கும் பரிசுத்தாவியானவரின் உணர்த்துதல் மூலம், தான் ஒரு பாவி என்பதை அறிந்து, பாவங்களிலிருந்து மனந்திரும்பி அவற்றை இயேசுகிறிஸ்துவிடம் அறிக்கையிட்டு அவருடைய நீதியைப் பெற்றுக்கொள்வதினால் ஏற்படும் புதிய பிறப்பாயுள்ளது. இத்தகைய ஆவிக்குரிய பிறப்பே ஒருவனைத் தேவனுடைய ராஜ்யத்திற்குள் கொண்டுசெல்லும்.

பரிசுத்தாவியானவரின் உணர்த்துதலினால் மானிடரின் பாவம் போக்கும் பலியான இயேசு கிறிஸ்துவின் சிலுவைப் பலியைத் தங்களுடைய பாவத்திற்கான பிராயச்சித்தப் பலியாக ஏற்றுக் கொண்டு அவரை விசுவாசிப்பவர்கள் தேவனுடைய ராஜ்யத்திற்குள் வந்தாலும், அவர்கள் தற்பொழுது இயேசுகிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலேயே இருக்கின்றனர்.[22] ஏனெனில், இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிக்கப்படுகிறவர்களை அவர் சபையிலேயே சேர்க்கின்றார் (அப்.2:47).[23] இதனால், சபையே தேவனுடைய ராஜ்யம் என்று சிலர் கருதுகின்றனர்.[24] ஏனெனில், "இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்" என்று கூறிய இயேசுகிறிஸ்து, "தேவனுடைய ராஜ்யத்தின் திறவுகோல்களைப் பேதுருவிடம் கொடுத்ததினால்" (மத்.16:18-19), சபையே தேவனுடைய ராஜ்யம் என்னும் எண்ணத்தை ஏற்படுத்துகிறது. ஆனால், சபை பெந்தெகொஸ்தே நாளிலேயே உருவானது.[25] தேவனுடைய ராஜ்யம் பழைய ஏற்பாட்டுக்

---

[19] 1கொரிந்தியர் 15:1-5இல், தான் பிரசங்கிக்கும் சுவிசேஷச் செய்தியை சுருக்கமாக எழுதும் பவுல், "அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்தபிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே இரட்சிக்கப்படுவீர்கள். மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே. நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து, கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார்" என்று குறிப்பிட்டுள்ளார்.

[20] யோவான் 16:8இல், பரிசுத்தாவியானவர் "பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்" என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார்.

[21] யோவான் 3:3இல் "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார்.

[22] சபையைப்பற்றிய முழுமையான வேதாகம சத்தியத்தை அறிந்துகொள்வதற்கு எனது "திருமறை போதிக்கும் திருச்சபை" என்னும் நூலைப் பார்க்கவும்.

[23] அப்போஸ்தலர் 2:47இல், "இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[24] G.Vos, *The Teaching of Jesus Concerning the Kingdom of God and the Church*, p. 150. New York: American Tract Society, 1903.

[25] பழைய ஏற்பாட்டிலும் சபை இருந்தது என்று சிலர் கருதுகின்றனர். இதற்குக் காரணம், சபையைக் குறிப்பிடுவதற்குப் புதிய ஏற்பாட்டில் உபயோகிக்கப்பட்டுள்ள எக்ளீஷியா என்னும் கிரேக்கச் சொல் பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில் இஸ்ரவேல் மக்களின் ஒன்றுகூடுதலுக்கும் உபயோகிக்கப்பட்டிருப்பதேயாகும். ஆனால் கிரேக்க மொழியில் இச்சொல் மனிதரின் எல்லாவிதமான ஒன்றுகூடுதல்களுக்கும் உபயோகிக்கப்படும் ஒரு சொல்லாகவே இருந்தது. இதனால்தான் அக்கால கிரேக்க இலக்கியங்கள் அனைத்திலும் இச்சொல் உள்ளது. ஆனால் அவைகள் கிறிஸ்தவ அர்த்தத்தின்படியான சபைகள் அல்ல. அப்போஸ்தலர் 19:32இல் பவுலின்மீது கோபத்துடனிருந்த மக்களுக்கும் எக்ளீஷியா என்னும் சொல்லே உபயோகிக்கப்பட்டுள்ளது. தமிழ் வேதாகமத்தில் இதைக் கூட்டம் என்று மொழிபெயர்த்துள்ளனர். இக்கூட்டத்தினர் யார் என்பதை 24ஆம் 25ஆம் வசனங்கள் அறியத்தருகின்றன. எனவே, எக்ளீஷியா என்னும் ஒரு சொல்லை மாத்திரம் வைத்து பழைய ஏற்பாட்டிலும் சபை இருந்தது என்று கூறுவது அர்த்தமற்றது. ஏனென்றால், சபையைக் குறித்து இயேசுகிறிஸ்து குறிப்பிடும் போது "நான் என் சபையைக் கட்டுவேன்" என்று

காலத்திலும் இருந்தது. எனினும், “தேவனுடைய ராஜ்யம் என்பது தேவனுடைய ஆளுகையாக இருப்பதினால்”[26] பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவனுடைய ஆளுகைக்கு உட்பட்ட “இஸ்ரவேல் நாடே” தேவனுடைய ராஜ்யமாக இருந்தது. இதனால், அக்காலத்தில் தேவனுடைய ராஜ்யம் பூகோளரீதியான உலக ராஜ்யமாகவே இருந்தது. ஆனால், இயேசுகிறிஸ்து தேவனுடைய ராஜ்யத்தைப்பற்றி அறிவித்தபோது, நாம் ஏற்கனவே பார்த்தவிதமாக, அவர் இவ்வுலக ராஜ்யத்தை அல்ல, ஆவிக்குரிய ராஜ்யத்தைப்பற்றியே கூறினார். இதனால்தான், தேவனுடைய ராஜ்யம் மனிதருடைய கண்களுக்குத் தென்படக்கூடிய விதமாகப் பிரத்தியட்சமாக வராது என்று அவர் கூறினார் (லூக்.7:20-21). எனவே, இயேசுகிறிஸ்து அறிவித்த தேவனுடைய ராஜ்யம் சபையிலேயே உள்ளது. அதாவது, “சபை தேவனுடைய ஆளுகைக்கு உட்பட்டதாய் இருப்பதினால், தேவனுடைய ராட்சியத்தின் தற்கால பிரதிபலிப்பாய் உள்ளது.”[27] இதனால், தற்காலத்தில் தேவனுடைய ராஜ்யம் ஆவிக்குரியதாய் உள்ளது. அதாவது, சபை தேவனுடைய ஆளுகைக்கு உட்பட்டதாய் இருப்பதினால் தேவனுடைய ஆவிக்குரிய ராஜ்யமாக உள்ளது.

தேவனுடைய ராஜ்யம் தற்காலத்தில் சபையில் இருப்பதினால், இது ஆவிக்குரிய ராஜ்யமாக இருந்தாலும், இது தேவனுடைய ராஜ்யத்தின் ஒரு பகுதியாகவே உள்ளது. இதனால்தான், தம்முடைய வருகையோடு தேவனுடைய ராஜ்யமும் இவ்வுலகத்திற்கு வந்துவிட்டது என்பதை அறியத்தரும் விதத்தில் “தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிருக்கிறது” (மத்.4:17, மாற்.1:15) என்றும், “உங்கள் மத்தியில் இருக்கின்றது” என்றும் கூறிய இயேசுகிறிஸ்து, தேவனுடைய ராஜ்யத்தின் வருகைக்காக ஜெபிக்கும்படியும் அறிவுறுத்தியுள்ளார் (மத்.6:10). இதனால், இயேசுகிறிஸ்துவின் வருகையோடு இவ்வுலகத்திற்கு வந்துவிட்ட தேவனுடைய ராஜ்யத்தின் வருகைக்காக நாம் ஏன் ஜெபிக்க வேண்டும் என்னும் கேள்வி நமக்குள் எழலாம். உண்மையில், இயேசுகிறிஸ்துவின் வருகையோடு தேவனுடைய ராஜ்யம் இவ்வுலகத்திற்கு வந்தாலும், தற்காலத்தில் இது ஆவிக்குரிய ராஜ்யமாக சபைக்குள் இருப்பதினால், இது பூகோளரீதியாக வெளிப்படுவதற்காக ஜெபிக்கும்படியே இயேசுகிறிஸ்து அறிவுறுத்தியுள்ளார். ஏனெனில், “இயேசு கிறிஸ்துவின் போதனையில் தேவனுடைய ராஜ்யம் நிகழ்காலத்தில் இருக்கும் ராஜ்யமாக மாத்திரமல்ல, எதிர்காலத்தில் வரவிருக்கும் ராஜ்யமாகவும் விளக்கப்பட்டுள்ளது.”[28] அதாவது, தற்காலத்தில் சபையின் தலையாக இருந்து சபை மக்களை ஆவிக்குரிய பிரகாரம் ஆளுகை செய்யும் இயேசுகிறிஸ்து, மறுபடியுமாக இவ்வுலகத்திற்கு வரும்போது எருசலேமிலிருந்து முழு உலகையும் ஆயிரம் வருஷங்களுக்கு ஆளுகை செய்வார். இதனால்தான், இதைப்பற்றிய தரிசனங்கள் யோவானுக்கு கொடுக்கப்பட்டபோது, “ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான். அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்கு முரிய ராஜ்யங்களாயின. அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின” (வெளி.11:15). உண்மையில், இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகத்திற்கு வரும்போதே இதைப்பற்றி மரியாளுக்குச் சொல்லப்பட்டது. இதனால்தான், இயேசுகிறிஸ்துவின் பிறப்பை அறிவித்த தேவதூதன் மரியாளிடம், “இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார். கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார். அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான்” (லூக்.1:31-33). இத்தீர்க்கதரிசனத்தின் முதற்பகுதி இயேசுகிறிஸ்துவின் முதலாவது வருகையில் நிறைவேறியதைப் போலவே, இதன் இரண்டாவது பகுதி அவருடைய இரண்டாவது வருகையில் நிறைவேறும். இவ்விதமாகவே, இயேசுகிறிஸ்துவின் வருகையைப்பற்றிய தீர்க்கதரிசனங்களில் அவருடைய முதலாவது வருகையில் நிறைவேறாதவைகள் அனைத்தும் அவருடைய இரண்டாவது வருகையில் நிறைவேறும்.

---

எதிர்காலத்தில் தாம் செய்யப்போகும் காரியத்தைப்பற்றியே மத்தேயு 16:18இல் தெரிவித்துள்ளார். இதனால், இயேசுகிறிஸ்து முன்னறிவித்தவிதமாக பெந்தெகொஸ்தே நாளில் தம்முடைய சபையைக் கட்டத் தொடங்கிய அவர், இரட்சிக்கப்படுகிறவர்களை சபையில் கொண்டுவந்து சேர்ப்பதன் மூலமாகக் கட்டுகிறார்.

[26] G.E.Ladd, *Jesus and the Kingdom*, pp. 259-260. New York: Harper and Row, 1964.

[27] M.J.Erickson, *Christian Theology*, pp. 1041-1042.

[28] G.E.Ladd, *The Gospel of the Kingdom: Scriptural Studies in The Kingdom of God*, pp. 16-17.

தேவனுடைய ராஜ்யம் என்பது தேவனுடைய ஆளுகையைக் குறிக்கின்றது. இதனால் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இஸ்ரவேல் ராஜ்யத்தில் தேவனுடைய அளுகை இருந்தது. தற்காலத்தில் சபையில் அவருடைய ஆளுகை உள்ளது. ஆனால், இயேசுகிறிஸ்து மறுபடியும் இவ்வுலகத் திற்கு வரும்போது எருசலேமிலிருந்து ஆயிரம் வருஷங்களுக்கு முழு உலகையும் ஆளுகை செய்வார். இதனால், இப்பொழுது மனிதருடைய கண்களுக்குத் தென்படாத விதத்தில் ஆவிக்குரிய பிரகாரமாய் சபைக்குள் இருக்கும் தேவனுடைய ராஜ்யம் அக்காலத்தில் முழு உலகிலும் வெளிப்படையாகத் தென்படும் விதத்தில் இருக்கும். எனவே, ஆவிக்குரிய தேவனுடைய ராஜ்யமான சபையில் இருக்கும் கிறிஸ்தவர்களாகிய நாம், தேவனுடைய ராஜ்யம் இவ்வுலகில் முழுமையாக வெளிப்படுவதற்காக, அதாவது இயேசுகிறிஸ்து மறுபடியுமாக இவ்வுலகத்திற்கு வந்து தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்காக ஜெபிப்பவர்களாகவும், தற்காலத்தில் இயேசுகிறிஸ்துவை அறியாதவர்களையும் அவருடைய ராஜ்யத்திற்குள் கொண்டுவருகிறவர்களாகவும் இருக்கவேண்டும்.